1973 பிப்ரவரி 13]

கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மைக் கருவிகள் வழங்கல்.

***152 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவையான வண்டிப்பட்டைகள், அச்சு, கொழுக் கலப்பை இரும்புகளும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

திரு. தி. பொன்னுமலை : விவசாயிகளுக்கு இப்போது ஒரு வண்டி கட்ட வேண்டுமென்றால் ரூ. 1,000, ரூ. 1,500 ஆகிறது. சுமார் ஐந்தாண்டு களுக்கு முன்பு ஒரு வண்டி கட்ட ரூ. 500 ஆக இருந்தது. அப்போது நெல் விலை க்விண்டாலுக்கு ரூ. 45 என்றிருந்தது. இப்போது அது ரூ. 150 ஆகிறது. எனவே கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்குச் சகாய விலையில் அவர்களுக்கு வேண்டிய வண்டிப்பட்டைகள், அச்சு போன்ற வண்டி கட்டுவதற்கு வேண்டிய சாமான்களை வழங்குவதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் அவர்கள் பகுதியில் இதற்கென்று தனியாக கூட்டுறவு சங்கம் இல்லை என்று கருதுகிறேன். அப்படி கூட்டுறவு சங்கம் அமைக்க முன்வந்தால் அரசாங்கம் அதற்கான ஆதரவைக் கொடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : கூட்டுறவுத் துறையில் இம்மாதிரி நிறுவனங்கள் இயங்குவதாக அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய நிறுவனங்கள் ஏதாவது இயங்குகின்றனவா? அப்படி இயங்க வில்லை என்றால் கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் ஒன்றிரண்டு முக்கியமான இடங் களில் அத்தகைய நிறுவனங்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கீழ் தஞ்சையில் இப்படிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குகின்றனவா என்ற விவரம் இப்போது இல்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் 38 கூட்டுறவு சங்கங்களில் இப்படிப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான கருவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1970-71-ல் இந்த 38 கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஏறத்தாழ ரூ. 17,61,000 அளவிற்கு பெருமானமுள்ள கருவிகள் விநியோகிக்கப்பட்டன.

திரு. மு. சண்முகம் : கூட்டுறவுத் துறையில் விவசாயப் பொறியியல் சேவா சங்கங்கள் என்று ஏற்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன? அவை செயல்பட அரசாங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த என்ஜினியரிங் கூட்டுறவுகள் இப்படிப்பட்ட கருவிகளைச் செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் என்பது இந்தக் கூட்டுறவின் நோக்கங்களில் ஒன்றாகும். அவைகள் இன்னும் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவையான இடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த 32 கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வளவு லாபத்தில் ஓடுகின்றன? எவ்வளவு எண்ணம் நஷ்டத்தில் ஓடுகின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர் : இதற்கான புள்ளிவிவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப் படும்.

திரு. என். கிட்டப்பா : இம்மாதிரி 32 கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குவதாகக் கூறப்பட்டது. அந்த 32-ல் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மொத்த விவரம் என்னிடம் இருக்கிறது. 32 அல்ல 38. The total is 38 and the amount distributed to these societies for these implements is Rs. 17.16 lakhs. மொத்த விவரம்தான் இருக்கிறது இப்போது. தனியாக விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

தமிழ்நாடு நிலவள வங்கி ஊழியர்கள்.

* 159 வினு— திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிலவள வங்கியிலும் மாநிலமெங்கும் அதன் கிளைகளிலும் வேலை செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றனர்?